DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, COONOOR

**Case No: CC.144/2025**

Prosecution witness **PW.3 (LW.3)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | Abilesh Kumar | Caste | : | |
| Father Name | : | Arumugam | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | 30 |
| Time | : | | | | |

**(Accused present. Accused counsel present)**
Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of **01.06.2026**

**01.06.2026 முதல் விசாரணை** :

1. நான் தற்போது முத்தநாடு சேலாஸில் குடியிருந்து எஸ்டேட்டில் கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.2யை எனக்கு தெரியும், எஸ்டேட்டில் வேலை இல்லாத போது அவரிடம் நான் கூலி வேலைக்கு செல்வேன். 25.06.2025ம் தேதியில் கெந்தலாவிலிருந்து குன்னூருவிற்கு கட்டுமான பொருட்கள் எடுப்பதற்காக நானும் அ.சா.1னும் ஸ்கூட்டியில் வந்துகொண்டிருந்தோம். அவ்வாறு பெக்காடு பேக்டரி அருகே வரும் போது கேரளா பதிவெண் கொண்ட ஒரு கார் எங்களை முந்தி சென்றது.

2. அவ்வாறு முந்தி சென்ற காரானது எங்களுக்கு எதிர்புறமாக வந்துகொண்டிருந்த ஒரு ஸ்கூட்டி மீது மோதியது. ஸ்கூட்டியில் வந்தவர் டிவைடர் தாண்டி விழுந்துவிட்டார். நாங்கள் சென்று பார்த்தோம். அதற்குள் நிறைய நபர்கள் வந்தார்கள். அங்கு இருந்தவர்கள் ஆம்புலன்ஸ்க்கு போன் செய்தார்கள். எங்களுக்கு வேலைக்கு நேரம் ஆனதால் நாங்கள் கிளம்பிவிட்டோம். மேற்படி சம்பவங்கள் காலை 11லிருந்து 11.30ற்குள் நடந்திருக்கும். அதற்கு பின்பு கெந்தலாவிலிருந்து வேலையை முடித்துக்கொண்டு மாலை 06.30 மணியளவில் குன்னூரை நோக்கி நானும் அ.சா.2னும் வந்துகொண்டிருந்தோம்.

3. நாங்கள் வரும் போது சம்பவம் நடந்த இடத்தில் போலிசார் நின்றுகொண்டிருந்தார்கள். நாங்களும் அங்கே நின்று பார்த்தோம். போலிசார் அங்கு வரைபடம் வரைந்து என்னிடமும் அ.சா.2னிடமும் கையொப்பம் வாங்கினார்கள். என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணத்தில் உள்ள 2வது கையொப்பம் என்னுடையது தான். என்னை வழக்கு சம்பந்தமாக போலிசார் விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை** – வாய்ப்பளித்தும் இல்லை.

**மறுவிசாரணை** – இல்லை.

Sd/- Tmt.R.Geetha B.A. B.L.,
Judicial Magistrate (FAC),
Coonoor.